# ஆயக்காரனாகிய லேவி இயேசுவை சந்திப்பதற்காகப் பாவிகளைத் திரட்டினான்.

பிள்ளைகளுக்கு போதிப்பவர்கள் S5b பாடத்தை வாசிக்கவும்.

## 1. தேவ வார்த்தையால் உங்கள் இருதயத்தையும் மனதையும் ஆயத்தப்படுத்துங்கள்.

**ஜெபம்:** கர்த்தராகிய இயேசுவே, எல்லா இடங்களிலும் உமது சீஷர்களாக மனிதர்களையும் குடும்பங்களையும் ஆயத்தம் செய்வீராக. அத்தகைய மனிதர்களை இனம் காணவும். அவர்கள் சார்ந்திருக்கும் குழுவோடு அவர்களை சந்திக்கவும் உதவி புரிவீராக.



மாற்கு **2:14-17** ல் இயேசு எவ்வாறு பாவிகளை அவர்களுடைய வீட்டில் சந்தித்தார் என்பதைக் காண்க.

- ஆயக்காரர்களைப் பற்றி இயேசு என்ன நினைக்கிறார்? *(வச.14)*
- இயேசுவைத் தன் வீட்டில் விருந்துக்கு அழைத்தது யார்? *(வச.15)*
- லேவி வேறு யாரை தன் வீட்டுக்கு அழைத்தான்? *(வச.15)*
- இயேசுவும் மற்ற பாவிகளும் ஒன்றாக இருந்து என்ன செய்து கொண்டு இருந்தார்கள்? *(வச.16)*
- எப்படிப்பட்ட மனிதர்களை இயேசு மனம் திரும்பும்படி அழைத்தார்? *(வச.17)*

தேவனைத் தேடுபவர்களை பேதுரு எவர்களுடைய வீட்டில் எவ்வாறு சந்தித்தார் என்பதை **அப்.10:24-33ல்** காண்க.

- எப்படிப்பட்ட மனிதர்களை கொர்நேலியு தன் வீட்டிற்கு அழைத்தான்? *(வச. 24)*
- அவிசுவாசிகளைக் குறித்து பேதுருவின் மனநிலை எவ்வாறு இருந்தது? *(வச.28)*
- கொர்நேலியு பேதுருவைத் தன் வீட்டுக்கு எதற்காக அழைத்து அனுப்பினான்? *(வச.30-32)*
- கொர்நேலியு தனக்கும், குடும்பத்தார்க்கும், தனது நண்பர்களுக்கும் பேதுரு என்ன சொல்ல வேண்டும் என்று அழைத்தான்? *(வச. 33)*

பவுல் தன் வீட்டுக்கு வந்தவர்களை எவ்வாறு வரவேற்று போதனை அளித்தார் என்பதை **அப்.28:30-31ல்** காண்க.

- ரோமபுரியில் பவுல் தன் வாடகை வீட்டில் எவ்வளவு நாள் குடியிருந்தார்?
- அங்கு தன்னைப் பார்க்க வந்த மக்களிடம் அவர் என்ன பேசினார்?

அவிசுவாசிகள் குழுவிற்கு வருகை தரும் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை 1 **கொரி.14:14-26ல்** காண்க.

- குழுவில் பேசி தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள எத்தனை பேருக்கு அனுமதி அளிக்க வேண்டும்?
- எப்படிப்பட்ட விஷயங்களை விசுவாசிகள் கூற வேண்டும்?

குறிப்பு: தீர்க்கத்தரிசனம் சொல்வது இத்தகைய குழுவில் எல்லா விசுவாசிகளுக்கும் முடியக்கூடியதே. தேற்றி ஊக்கப்படுத்தி அறிவூட்டும் வார்த்தைகளைக் கூறுவதே வேண்டியது ஆகும் (1 கொரி.14:3).

- விசுவாசிகள் குழுவில் பேசுவதை கேட்கும் அவிசுவாசிகளின் இருயத்தில் தேவன் என்ன செய்வார்?


சிறிய குழுக்களில் **விசுவாசிகள் இரண்டு முக்கியமான காரியங்களைச் செய்யலாம்.**

1. சகேயு, மத்தேயு கொர்நேவியு (லூக்.19:1-10, மத்.9:9-13, அப்.10:22-24) ஆகியோரைப்போல இயேசுவைக் குறித்துக் கற்றுக்கொள்ளுவதற்காக, **புதிய விசுவாசிகள்,** தங்களது விசுவாசிகள் அல்லாத குடும்பத்தார்களையும் நண்பர்களையும் சிறிய குழுக்களுக்கு அழைத்து வரலாம்.
2. சிறிய குழுக்களில் எல்லோரும் ஈடுபாட்டுடன் பங்கேற்கவும், யாவர் கூறுவதையும் கேட்கவும் முடிவதால், **முதிர்ச்சி அடைந்த விசுவாசிகள்** ஐக்கியம் நிறைந்த 'ஒருவருக்கொருவர்' கற்பனைகளைநடைமுறைப்படுத்தி ஒருவருக்கொருவர் அன்பாக சேவை செய்ய முடியும். புதிய விசுவாசிகள் முதலில் கூச்சம் உடையவர்களாக இருப்பார்கள். எனவே அவர்கள் ஆயத்தப்படும் வரை பேசுவதற்காக அவர்களை பலவந்தப்படுத்த வேண்டாம்.

   எனினும் சும்மா சிறு குழுக்களாகவோ, வீட்டு சபைகளாகவோ கூடி வருவதனால் மட்டுமே இந்தஇரண்டையுமே சிறு குழுக்கள் செய்து விடமுடியும் என்பது உறுதியல்ல. சில சமயங்களில், மரபான சபைகளில் வாய்பேசாது கேட்டுக்கொண்டிருக்கும் விசுவாசிகள், அல்லது ஒருவர்க்கொருவர் தொடர்பின்றி மரபான வகுப்பறை அறிவுரைகளையே கேட்டுப் பழகியவர்கள், அத்தகைய தவறுகளை சிறு குழுக்களுக்குள்ளும் கொண்டு வருவார்கள்.

**2. வரும் வாரத்திற்கான செயல்பாடுகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

- அவிசுவாசிகள் கற்றுக்கொள்ள விரும்பினால், அவர்களை சென்று சந்தித்து, இயேசுவைப் பற்றி கேட்க மற்றவர்களையும் அழைத்து வரும்படி கூறுங்கள்.
- சபையில் புதிய விசுவாசிகள் இருந்தால் அவர்களையும் சென்று சந்தித்து, இயேசுவைப் பற்றி கேட்க மற்றவர்களையும் அழைத்து வரும்படி கூறுங்கள்.
- ஒரே பரிசுத்த மான தேவன் நமது ஜெபங்களைக் கேட்கிறார் என்பதையும், அவர் மற்ற எல்லா ஆவிகளைவிடவும் மிகவும் வல்லமை உள்ளவர் என்றும் அவர்கள் புரிந்து கொள்ள உதவியாக ஒரு பழைய ஏற்பாட்டு கதையை 'கூடியிருக்கும் குழுவிற்கு' சொல்லவும்.
- மேலே பகுதி 1 ல் படித்தது போன்ற, இயேசுவின் அன்பு, இரக்கம் ஆகியவற்றைக் காட்டும் கதைகளையும் சொல்லவும்.
- தொடர்ந்து கூடி வருமாறு மக்களுக்குக் கூறவும்.
- வீட்டு சொந்தக்காரர்களோடு இணைந்து கூட்டத்துக்கு வரும் மக்களை வரவேற்க ஏற்பாடு செய்க. ஒருவரை ஒருவர் நேராய் பார்க்குமாறு அமர வைக்கவும். கலாச்சாரத்துக்கு ஏற்ற வகையில் ஐக்கியமாக இருக்கவும்.
- வீட்டு சுவிசேஷ கூட்டங்களை எவ்வாறு நடந்த வேண்டும் என்று கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனையைப் பின்பற்றவும்.

| | |
|---|---|
| சிறு குழுக்களில் ஒருவருக்கொருவர் எளிதாய் பேசும் வண்ணம் நாற்காலிகளை அல்லது பிறர் உட்காரும் வசதிகளை ஏற்பாடு செய்யவும். |  |
|  | எது சிறந்தது? ஒருவர் முதுகை ஒருவர் பார்ப்பது போல் அமர்வதா? அல்லது ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பது போல் அமர்வதா? *(பதில்: ஒருவரை ஒருவர் பார்ப்பது போல் அமர்ந்தால் மக்கள் ஒருவர் பேசுவதை மற்றவர் கேட்டு உரையாட வசதியாய் இருக்கும்)* |

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

உங்கள் குழுவின் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப செயல்பாடுகளை தேர்ந்தெடுக்கவும்.

**குழந்தைகள்** தாங்கள் தயாரித்த நாடகத்தையும் கேள்விகளையும் ஆராதனையின் போது வழங்கட்டும்.

மேலே உள்ள கதைகளை (பகுதி 1 ) வாசித்து அல்லது மனப்பாடமாகக் கூறி அதே கேள்விகளையும் கேட்கவும்.

பிலிப்பிய சிறையதிகாரியின் குடும்பக் கூடுகையை **வாசித்து** விளக்கம் கூறவும்.

திட்டமிடப்பட்டுள்ள வீட்டு சுவிசேஷக் கூட்டங்களுக்காக ஆராதனையின் போது ஜெபிக்கவும்.

வீட்டு சுவிசேஷக கூட்டங்களைப் பற்றிய பரிந்துரைகளை **மீள்பார்வை** செய்க (கீழே பார்க்கவும்)

அண்மையில் நடந்த வீட்டு சுவிசேஷக கூட்டங்கள் பற்றிய அறிக்கைகளையும் சாட்சிகளையும் **கேளுங்கள்.**

அப். 2:43 ஐ படித்து **கர்த்தரின் பந்தியை** ஆசரித்து, ஆதி சபை கர்த்தரின் பந்தியை வீடுகளிலேயே ஆசரித்தது என்பதை விளக்கவும்.

இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களை** அமைத்து, ஜெபித்து, திட்டங்களை உறுதிப்படுத்தி, ஒருவரை ஒருவர் ஊக்கப் படுத்துங்கள்.

இணைந்து 1 கொரி. 14:24-25 ஐ **மனனம் செய்யவும்.**



நீங்கள் புதிய மந்தைக்கான தலைவர்களைப் பயிற்றுவிப்பவரா? “புதிய மேய்ப்பர்களைப் பயிற்றுவிப்போர்க்கான வழிமுறைகள்” என்ற ப-தீ பாடம் A0f ஐ இதுவரை படிக்கவில்லையானால் இப்போதே படிக்கவும்.